# 4

# விலைகளும் கூலிகளும்

## 4.1 பொதுநோக்கு

அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்களினால் அளவிடப்பட்டவாறான பொது விலை மட்டம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்துச் செல்லும் போக்கொன்றினைத் தொடர்ந்ததுடன், ஆண்டின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்க உயர்வினை நோக்கி நகர்ந்தது. உணவு மற்றும் உணவல்லாப் பொருட்கள் இரண்டினதும் உலகளாவிய பண்ட விலை உயர்வுகள், உயர்ந்த சரக்குக் கட்டணங்கள், உள்நாட்டு வழங்கல்பக்கத் தடைகள், பல்வேறுபட்ட விலைத் திருத்தங்களிலிருந்து தோன்றிய நேரடியான மற்றும் நேரடியற்ற தாக்கங்கள் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்று வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டமையால் தூண்டப்பட்ட கேள்வி அழுத்தம் என்பன உள்நாட்டு விலைகளின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. உணவு வகையில், பொது விலை மட்டத்தில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கான முக்கிய பங்களிப்பு தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளிலிருந்து கிடைத்தது. மேலும், தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2021இன் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு, சேதன வேளாண்மை நடைமுறைகளுக்கு மாறியதன் காரணமாக ஏற்பட்ட அறுவடை வீழ்ச்சி மற்றும் உலகளாவிய நோய்த்தொற்று கட்டுப்படுத்தப்பட்டமையுடன் பொருளாதார நிலைமைகள் வழமைக்குத் திரும்பியமையின் காரணமாக உயர்ந்த பண்டிகைக் காலக் கேள்வி என்பன முக்கிய ஏதுக்களாக அமைந்தன. மேலும், தளம்பல் உணவு வகை நீங்கலாக, மற்றைய உணவுப் பொருட்களின் விலைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன. உணவல்லா வகையிலுள்ள பண்டங்களின் விலைகள் இதே காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்ததுடன் ஆண்டின் இறுதிப்பகுதியில் உயர்ந்த வேகத்தில் அதிகரித்த போதும் உணவு வகையுடன் ஒப்பிடுகையில் இது பொது விலை மட்டத்தில் குறைந்தளவு தாக்கத்தினையே உருவாக்கியது. இவ்வபிவிருத்திகளை பிரதிபலிக்கின்ற விதத்தில், ஒட்டுமொத்த அதிகரிக்கும் போக்கை தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சனவரியின் 138.7 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2021 திசெம்பரில் 154.7 சுட்டெண் புள்ளிகளுக்கும் சனவரியில் 142.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், 2021 திசெம்பரில் 161.0 சுட்டெண் புள்ளிகளுக்கும் அதிகரித்தது. கூலிகளின் நியதிகளில், முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறையின் பெயரளவு மற்றும் உண்மைக் கூலிகள் இரண்டும் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் அதிகரித்தன. குறைந்தபட்ச கூலிகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்களின் காரணமாக முறைசார் தனியார் துறைக்கான கூலிகள் அதிகரித்த வேளையில் முறைசாராத் தனியார் துறைக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, கொவிட்-19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை காரணமாக அதிகரித்த தொழிலாளருக்கான கேள்வி மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை என்பன காரணங்களாக அமைந்தன. அரச துறை நியதிகளில், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில், உண்மை கூலி வீதச் சுட்டெண் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் வீழ்ச்சியடைந்தது.

## 4.2 விலைகள்

### பொது விலை மட்டத்தில் அசைவுகள்

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்[1] ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினாலும் அளவிடப்பட்டவாறான பொது விலை மட்டம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்துச்செல்லும் போக்கினைக் கொண்டிருந்தமைக்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்புக்களே பெரும்பாலும் காரணமாக அமைந்தன.** இவ்வாண்டுப்பகுதியில் உணவு வகையின் பொருட்களின் விலைகள் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, உணவு வகையுடன் ஒப்பிடுகையில் பொது விலை மட்டத்தின் மீது குறைந்த தாக்கத்தினை உருவாக்கிய உணவல்லா வகையின் பொருட்களின் விலைகளும் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. இதற்கமைய, பொது விலை மட்டம், பெரும்போக காலத்தில் சாதகமான வழங்கல்பக்க காரணிகளின் காரணமாக உணவு வகைகள் வீழ்ச்சியடைந்த மாச்சு மாதம் தவிர, 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ச்சியான அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. மேலும், உலகளாவிய பண்ட விலை உயர்வுகள், உயர்ந்த சரக்குக் கட்டணங்கள், உற்பத்திப் பற்றாக்குறைகள் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்வதில் காணப்பட்ட தடைகள் என்பன பொது விலை மட்டத்தின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன், உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் பல்வேறுபட்ட மேல்நோக்கிய விலைத் திருத்தங்களிலிருந்து தோன்றிய மறைமுகமான தாக்கங்கள் உள்ளடங்கலாக ஆண்டின் இறுதிப்பகுதியில் பொது விலை மட்டங்கள் கணிசமானளவு வேகத்தில் அதிகரிப்பதற்கு நிர்ப்பந்தித்தன. நிரம்பல் பற்றாகுறையைக் கொண்ட பண்டங்களினதும் பணிகளினதும் விலைகளின் அதிகரிப்பிற்க்கு வங்கித்துறையினால் பற்றாகுறை நிதியிடலின் காரணமாக அதிகரித்த பண வருமானங்களும் பங்களித்தன. மேலும், கோவிட்-19 தொடர்பான குறைந்த கேள்வி ஆண்டின் இறுதியில் குறைந்துள்ளதுடன் கேள்வி அழுத்தம் பொது விலை மட்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.

**தளம்பலடையும் உணவு[2] வகையிலுள்ள பொருட்களின் விலைகள் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சேர்ந்து 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தன.** மேலும், சேதன வளமாக்கியின் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கிடைப்பனவு, சேதன பயிர்ச்செய்கை தொடர்பான சரியான வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் இல்லாமை, ஏற்கனவே இருந்த இரசாயன வளமாக்கி இருப்புக்களின் விலைகள் உயர்வடைந்தமை, சிதைவடைந்து போன பயிர்ச்செய்கை மற்றும் குறைந்த விளைச்சல் போன்ற சேதனப் பயிர்ச்செய்கை நடைமுறைகளுக்கு முழுமையாக மாறிக்கொள்ள முயற்சித்தமையுடன் தொடர்புபட்ட பிரச்சனைகள் தளம்பலடையும் உணவு விலைகளின் மீது கணிசமான மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தின. 2021 சனவரி மற்றும் பெப்புருவரியில் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமைக்கு அரிசி, தேங்காய், பச்சை மிளகாய் மற்றும் காய்கறிகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். எனினும், தளம்பலடையும் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் 2021 மாச்சிலும் ஏப்பிறலிலும் வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய், காய்கறிகள், வெங்காயம், பச்சை மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளே காரணமாக அமைந்தன. அவதானிக்கப்பட்ட விலைகளின் சரிவடைந்த போக்கு அதன்பின்னர் மாற்றமடைந்ததுடன் யூன் மாதத்தில் காணப்பட்ட முனைப்பான அதிகரிப்பிற்கு அரிசி, காய்கறிகள் மற்றும் உடன் மீன் என்பனவற்றின் விலைகளில் அவதானிக்கப்பட்ட உயர்வுகள் பங்களித்த வேளையில், 2021 யூலையிலும் அதேபோக்கு தொடர்ந்தும் காணப்பட்டது. தளம்பலடையும் உணவு வகைகளின் போக்கு ஒகத்தில் மாற்றமடைந்தமைக்கு அரிசி, தேங்காய் மற்றும் வெங்காயம் என்பனவற்றில் அவதானிக்கப்பட்ட விலை வீழ்ச்சிகள் காரணமாக அமைந்த வேளையில் அரிசி மற்றும் காய்கறிகளில் காணப்பட்ட விலை வீழ்ச்சிகள் 2021 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. அதன்பின்னர், ஒத்தோபரில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு அரிசி, பழங்கள், பெரிய வெங்காயம் மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட

அட்டவணை 4.1

**தெரிவுசெய்யப்பட்ட உணவு விடயங்களில் 2021இல் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகள்**

| விடயம் | உயர்ந்தபட்ச சில்லறை விலை (ரூ./கி.கி.) | உயர்ந்தபட்ச சில்லறை விலை நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|
| அரிசி | | 02.09.2021 (அ) |
| சம்பா | 103.00 | |
| நாட்டரிசி | 98.00 | |
| குத்தரிசி வெள்ளை | 95.00 | |
| குத்தரிசி சிவப்பு | 95.00 | |
| வெள்ளைச் சீனி | | 02.09.2021 (ஆ) |
| பொதிசெய்யப்படாதது | 122.00 | |
| பொதிசெய்யப்பட்டது | 125.00 | |


(அ) உயர்ந்தபட்ச விலை 2021 செத்தெம்பர் 29ஆம் நாளிலிருந்து நீக்கப்பட்டது.
(ஆ) உயர்ந்தபட்ச விலை 2021 நவம்பர் 03ஆம் நாளிலிருந்து நீக்கப்பட்டது.

மூலம் : பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைச் சுட்டெண்களாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு 2013=100) ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களையும் மாதாந்த அடிப்படையில் தொகுக்கின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது தேசிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளைக் குறித்துக்காட்டுகின்ற அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது கொழும்பு மாவட்டத்திலுள்ள நகர்ப்புற வீட்டுத்துறையினர் மத்தியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளை எடுத்துக்காட்டுகின்றது.

2 தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன் மீன், கடலுணவு, தேங்காய், உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கு என்பவற்றை உள்ளடக்குகின்றது.


வரைபடம் 4.1
விலைகள் மற்றும் கூலிகளின் அசைவுகள் - 2021




(அ) தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன்மீன் மற்றும் கடலுணவு, தெங்கு, உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சுவையூட்டும் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது.
(ஆ) ஏனைய உணவானது தளம்பலடையும் உணவுப் பண்டங்கள் நீக்கப்பட்ட ஏனைய உணவுப் பண்டங்களை உள்ளடக்குகின்றது.
(இ) குறிப்பிடப்பட்டுள்ள பெயரளவு மற்றும் உண்மையான கூலிகளின் மாற்றம் என்பது 2021 மற்றும் 2020 இன் சராசரிக்கு இடையிலான சதவீத மாற்றத்தைக் குறிக்கிறது.
(ஈ) கூலி நிர்ணய சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்ற முறைசார் தனியார்துறை ஊழியர்களின் கூலிகள்.


அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன. மேலும், தளம்பலடையும் உணவு வகையில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்கள் 2021 நவெம்பர் மற்றும் திசெம்பரில் தீவிரமடைந்தமைக்கு, அரிசி, காய்கறிகள், பச்சை மிளகாய், கோழி இறைச்சி, மீன், தேங்காய், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பனவற்றின் விலை அதிகரிப்புக்கள் பண்டிகைக் காலத்தின் காரணமாக நுகர்வோர் கேள்வியுடன் சேர்ந்து இவ்வதிகரிப்பினைத் ஏற்படுத்தின. அரிசி விலைகள் 2020/2021ஆம் ஆண்டின் பெரும்போக அறுவடை சந்தையை அடைந்த மாதங்கள் உட்பட 2021 யூலை வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன. எனினும், அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அரிசி விலைகள் 2021 ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதங்களில் வீழ்ச்சியடைந்தன. மேலும், ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்ட சம்பா, நாடு, வெள்ளைப்பச்சை அரிசி, சிவப்புப்பச்சை அரிசி என்பனவற்றின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் 2021 செத்தெம்பரிலிருந்து மேல்நோக்கி சீராக்கப்பட்டதெனினும் சந்தையில் அரிசியின் பற்றாக்குறையைத் தவிர்க்கும்பொருட்டு அதே மாதத்திலேயே உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் மீதான அரச வர்த்தமானி அறிவித்தல்

வரைபடம் 4.2
வாராந்த சில்லறை விலைகள் - அரிசி




மூலம் : இலங்கை மத்திய வங்கி


வரைபடம் 4.3
வாராந்த சில்லறை விலைகள் - மரக்கறிகள்




(அ) போஞ்சி, கரட், கோவா, பீட்ரூட், லீக்ஸ், தக்காளி மற்றும் முள்ளங்கி என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்
(ஆ) கத்தரி, பூசணி, பயற்றங்காய், வெண்டி, மற்றும் புடோல் என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்


மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.4
வாராந்த சில்லறை விலைகள் - தேங்காய் (நடுத்தர அளவு)




மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.5
வாராந்த சில்லறை விலைகள் - மீன் (அ)





(அ) கெலவல்லா, தலபத், பாரை, பலயா, மல்லட், சியர், சுறா, சாளை, உருளை, நெத்திலி, கும்பலவா மற்றும் லின்னா என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி


இரத்துச்செய்யப்பட்டது. அதேவேளை, வழங்கல்பக்கப் பிரச்சனைகளை சமநிலைப்படுத்துவதற்காக, 2021 நவெம்பர் தொடக்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. எனினும், செத்தெம்பரில் தொடர்பான உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அகற்றப்பட்டதன் காரணமாக அனைத்து வகை உள்நாட்டு அரிசி வகைகளினதும் விலைகள் விரைவான வேகத்தில் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டதுடன் இதற்கு, விசேடமாக கொவிட்-19 பரவல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியதன் காரணமாக 2021 நவெம்பர் மற்றும் திசெம்பர் காலப்பகுதியில் காணப்பட்ட உயர்ந்த பண்டிகைக்காலக் கேள்வியும் மேலதிகமாகப் பங்களித்தது. காய்கறிகளின் விலைகள் கலப்பான அசைவுகளை எடுத்துக்காட்டியமை மீது கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையினால் தூண்டப்பட்ட வழங்கலுக்கு ஏற்பட்ட இடையூறுகள், முக்கியமான பொருளாதார மையங்களில் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்பட்டமை மற்றும் மோசமான வானிலை நிலைமைகள் என்பன முக்கியமாக செல்வாக்கைச் செலுத்திய வேளையில் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் விலைகள் உயர்வடைந்தமைக்கு வளமாக்கி மற்றும் பூச்சிக் கொல்லிகளின் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட வழங்கல் பற்றாக்குறைகளும் பண்டிகைக் காலக் கேள்வியும் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் தேங்காய் விலைகள் ஒட்டுமொத்த வீழ்ச்சியைப் பதிவுசெய்தமையானது உயர்ந்தபட்ச சில்லறை விலைகளின் மீதான அரச வர்த்தமானி அறிவித்தலை 2021 யூன் 18ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச்செய்வதற்கு அரசாங்கத்திற்கு இடமளித்தது. எனினும், 2021 ஒத்தோபரிலிருந்து திசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் தேங்காய் விலைகள் அதிகரித்த போக்கொன்றினைக் காட்டியமைக்கு, பருவகாலக் காரணிகள், பண்டிகைக்காலத்தின் போதான உயர்ந்த நுகர்வு மற்றும் உலர் தேங்காயத் துருவலுக்கான அதிகரித்த வெளிப்புறக் கேள்வியின் காரணமாக உள்நாட்டு நுகர்விற்கான தேங்காயின் கிடைப்பனவு குறைவடைந்தமை என்பன காரணங்களாக அமைந்தன. இவ்வாண்டுப்பகுதியில் கோழி இறைச்சியின் விலை கணிசமாக அதிகரித்தமைக்கு சோளம் மற்றும் நுண்ணுயிர்க் கொல்லி போன்ற கோழித் தீனின் உயர்வடைந்த விலைகளிலிருந்து தோன்றிய உற்பத்திச் செலவின் உயர்வே முக்கிய காரணமாக

வரைபடம் 4.6
வாராந்த சில்லறை விலைகள் - உருளைக்கிழங்கு




மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.7
வாராந்த சில்லறை விலைகள் - இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம்





மூலம் : இலங்கை மத்திய வங்கி

அமைந்தது. அதேவேளை, பெரிய மற்றும் சிறிய மீன் வகைகள் இரண்டினதும் விலைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தன. மேலும், உருளைக்கிழங்கின் சிறப்புப் பண்டத் தீர்வை பல்வேறு திருத்தங்களுக்குள்ளாகியதுடன் 2021இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் உருளைக்கிழங்கின் விலைகள் பெரும்பாலும் உறுதியான மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் பின்னர் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. சின்ன வெங்காயத்தின் விலைகள் இக்காலப்பகுதியில் பொதுவான வீழ்ச்சியொன்றினை எடுத்துக்காட்டிய வேளையில் பெரிய வெங்காயத்தின் விலைகள் இவ்வாண்டுப்பகுதியில் பெரும்பாலும் உறுதியாகக் காணப்பட்டமைக்கு அரசாங்கத்தின் உரிய நேரத்திலான தலையீடுகள் காரணமாக அமைந்ததெனினும், ஆண்டின் பின்னரைப்பகுதியில் அது தொடர்ச்சியான அதிகரித்த போக்கினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, தளம்பலடைகின்ற உணவு வகையில் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் மீதான கட்டுப்பாட்டு விலைகளை விதிக்கின்ற விதத்தில் விடுக்கப்பட்டிருந்த அரச வர்த்தமானி அறிவித்தல்கள் சந்தையில் காணப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பற்றாக்குறையினைத் தவிர்க்கும் நோக்குடன் 2021 நவெம்பர் 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டன.


**தளம்பலடையும் உணவு வகைகள் நீங்கலாக, உணவுப் பொருட்களின் விலைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன.** இதன்படி, பருப்பின் விலைகள் 2020இல் அவதானிக்கப்பட்ட விலைகளைவிட அதிகமாக விளங்கியதுடன் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தமைக்கு உலகளாவிய சந்தையில் காணப்பட்ட விலை அதிகரிப்புக்களும் உயர்ந்த சரக்குக் கட்டணங்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. பண்டிகைக் காலக் கேள்வியின் காரணமாக ஏப்பிறலில் அதிகரித்த சீனியின் விலைகள் அதன் பின்னர் அதிகரித்து ஓகத்தில் உச்ச மட்டத்தினை அடைந்தமைக்கு சீனி இறக்குமதிகளை மேற்கொள்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தை பெற்றிருக்க வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டமை காரணமாக அமைந்தது. அரசின் தீர்மானமானது நாட்டில் சீனியின் கையிருப்பு ஏற்கனவே போதுமானளவில் இருக்கின்றது என்ற தகவலினை அடிப்படையாகக் கொண்டிருந்த போதும் தனிப்பட்ட வர்த்தகர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான இருப்புக்களை மட்டுமே உள்ளூர் சந்தைகளுக்கு விடுவித்தமையின் காரணமாக மேல்நோக்கிய விலை அழுத்தங்கள் தோன்றின. மேலும் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் உலகளாவிய சீனி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் உலகளாவிய ரீதியில்

வரைபடம் 4.8
வாராந்த சில்லறை விலைகள் - சீனி





மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.9
உலகளாவிய பண்ட விலைகள் - சீனி





மூலம் : உலக வங்கி

வரைபடம் 4.10
வாராந்த சில்லறை விலைகள் - பருப்பு




மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.11
வாராந்த சில்லறை விலைகள் - கோதுமை மா




மூலம் : இலங்கை மத்திய வங்கி

அதிகரித்த கேள்வியாலும் உயர்வாக விளங்கின. இதன் விளைவாக, சீனியின் விலையினைக் குறைக்கும் நோக்குடன் 2021 செத்தெம்பர் 02ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெள்ளைச் சீனியின் மீது உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டன. எனினும், செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து சீனியின் விலைகளில் காணப்பட்ட அதிகரித்த போக்கினைத் தொடர்ந்து 2021 நவெம்பர் 03ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சீனியின் மீது விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன. அவுத்ரேலியாவிலும் நியுசிலாந்திலும் காணப்பட்ட சாதகமற்ற வானிலை நிலைமைகள் காரணமாக உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டமை, கொவிட்-19 உடன் தொடர்பான கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டமையுடன் சேர்ந்து பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமையின்

அட்டவணை 4.2
தெரிவுசெய்யப்பட்ட உணவு விடங்களில் 2021இல் விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை

| விடயம் | சிறப்பு பண்டத் தீர்வை (ரூ./கி.கி.) | சிறப்பு பண்டத் தீர்வை நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி | | |
| சம்பா | 65.00 | 11.10.2021 |
| | 0.25 | 02.11.2021 |
| நாடு | 65.00 | 11.10.2021 |
| | 0.25 | 02.11.2021 |
| குத்தரிசி வெள்ளை | 65.00 | 11.10.2021 |
| | 0.25 | 02.11.2021 |
| குத்தரிசி சிவப்பு | 65.00 | 11.10.2021 |
| | 0.25 | 02.11.2021 |
| இறக்குமதி செய்யப்பட்ட உருளை கிழங்கு | 15.00 | 12.02.2021 |
| | 50.00 | 27.04.2021 |
| | 20.00 | 01.01.2022 |
| இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் | 0.25 | 14.01.2021 |
| | 40.00 | 08.09.2021 |
| | 10.00 | 01.01.2022 |
| பருப்பு | | |
| முழுமையானது | 0.25 | 14.01.2021 |
| பாதி | 0.25 | 14.01.2021 |
| சிவப்பு வெங்காயம் | 50.00 | 18.05.2021 |
| நெத்தலி | 100.00 | 12.02.2021 |
| கருவாடு | 100.00 | 12.02.2021 |


மூலம் : நிதி அமைச்சு

விளைவாக உலகளாவிய கேள்வி அதிகரித்தமையின் விளைவாக உலகளாவிய பால்மா விலைகள் அதிகரித்தன. இதன் விளைவாக, 2020ஆம் ஆண்டு முழுவதும் மாற்றமின்றிக் காணப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலைகள் 2021 ஒத்தோபரில் மேல்நோக்கிய விலைத் திருத்தங்களுக்கு உட்பட்டமைக்கு உலகளாவிய சந்தையில் காணப்பட்ட விலை அதிகரிப்புக்களும் உயர்ந்த சரக்குக் கட்டணங்களும் கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. இதனைத்தொடர்ந்து, உள்நாட்டு பால்மாவின் விலைகளும் 2021 ஒத்தோபர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அதிகரிக்கப்பட்டன. அதன் பின்னர், இறக்குமதி செய்யப்பட்ட பால்மா 2021இன் இறுதிப்பகுதியளவில் மற்றொரு மேல்நோக்கிய விலைத் திருத்தத்திற்கு உள்ளானது. அதேவேளை, உள்நாட்டு கருவாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக 2021 ஓகத்து 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கருவாடு மீது கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.100 கொண்ட சிறப்புப்பண்டத் தீர்வையை பேணுவது தொடர்பில் அரச வர்த்தமானி அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது. மேலும், கோதுமை மாவின் விலையும் 2021 ஒத்தோபர் 10ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.10 கொண்ட மேல்நோக்கிய விலைத்திருத்தமொன்றிற்கு உள்ளானது. இதன் பெறுபேறாக, பணிஸ் மற்றும் கேக் போன்ற ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுக்குப் புறம்பாக, 2021 ஒத்தோபர் 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 450 கிறாம் நிறைகொண்ட பாண் ஒன்றின் விலை ரூ.5 இனால் அதிகரித்தது. மேலும், கோதுமை மாவின் மீது மேற்கொள்ளப்பட்ட மேலுமொரு மேல்நோக்கிய விலைத் திருத்தம் காரணமாக 2021 நவெம்பர் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 450 கிறாம் பாண் ஒன்றின் விலை ரூ.10 இனால் மேல்நோக்கி திருத்தப்பட்டது. பின்னர், பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் அவை தொடர்பான உள்ளீடுகளின் செலவு மற்றும் ஏனைய சந்தை நிலைமைகள் என்பனவற்றினால் தீர்மானிக்கப்படக்கூடிய விலைகளில் விற்பனை

4

வரைபடம் 4.12

**உலகளாவிய பண்ட விலைகள் - மசகு எண்ணெய்**




*மூலங்கள்* : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்

வரைபடம் 4.13

**உலகளாவிய பண்ட விலைகள் - திரவ பெற்றோலிய வாயு**




*மூலம்* : சவுதி அராம்கோ திரவ பெற்றோலிய வாயு விலைகள்

அட்டவணை 4.3

**தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு 2021இல் மேற்கொள்ளப்பட்ட நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள**

| விடயம் | அலகு | திருத்தப்பட்ட விலை (ரூபா) | நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|---|
| பால்மா | | | |
| இறக்குமதி செய்யப்பட்டது | 400g | 480.00 | 09.10.2021 |
| | 400g | 540.00 | 31.12.2021 |
| உள்நாட்டு | 400g | 470.00 | 15.10.2021 |
| கோதுமை மா | | | |
| பிறிமா லிமிற்றட் | 1kg | 97.00 | 10.10.2021 |
| | 1kg | 114.50 | 27.11.2021 |
| செரண்டிப் | 1kg | 97.00 | 10.10.2021 |
| | 1kg | 114.50 | 29.11.2021 |
| திரவ பெற்றோலிய வாயு | | | |
| லிற்றோ காஸ் லங்கா லிமிற்றட் | 9.6kg | 1,150.00 | 25.07.2021 |
| | 12.5kg | 2,675.00 | 10.10.2021 |
| லாவ்ஸ் காஸ் பி.எல்சி | 12.5kg | 1,856.00 | 12.08.2021 |
| | 12.5kg | 2,840.00 | 10.10.2021 |
| எரிபொருள் | | | |
| பெற்றோல் (92 ஒக்டேன்) | | | |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 157.00 | 12.06.2021 |
| லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 162.00 | 22.10.2021 |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 177.00 | 21.12.2021 |
| தன்னியக்க டீசல் | | | |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 111.00 | 12.06.2021 |
| லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 116.00 | 22.10.2021 |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 121.00 | 21.12.2021 |
| மண்ணெண்ணெய | | | |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 1l | 77.00 | 12.06.2021 |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 1l | 87.00 | 21.12.2021 |

மூலங்கள் : பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இலங்கை மத்திய வங்கி


செய்யப்படுவதனை அனுமதிக்கும் நோக்குடன் 2021 திசெம்பர் 21ஆம் நாளிலிருந்து பாண் உள்ளிட்ட அனைத்து வெதுப்பக உற்பத்திகளின் மீதும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலைகள் அகற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டது. வெள்ளைச் சீனி, பருப்பு, கோழி இறைச்சி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், கோதுமை மா, பாசிப்பயறு, கடலை, கருவாடு, சோளம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா ஆகிய பல அத்தியாவசிய பண்டங்களின் மீது கட்டுப்பாட்டு விலைகள் விதிக்கப்படுவது தொடர்பில் விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் 2021 நவெம்பர் 03 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டமை கவனிக்கத்தக்கதொரு விடயமாகும்.

4

**2021ஆம் ஆண்டுப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட உயர்ந்த வேகத்துடன் சேர்ந்து தொடர்ச்சியாக அதிகரித்த போதும் உணவு வகைகளுடன் ஒப்பிடுகையில் பொது விலை மட்டத்தின் மீது குறைந்தளவு தாக்கத்தினையே உருவாக்கியிருந்தது.** அதிகரித்த கொவிட்-19 தடுப்பூசி வீதங்கள், நோய்த்தொற்றுடன் தொடர்பான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை என்பனவற்றின் காரணமாக கேள்வி வழங்கலை விஞ்சிக்காணப்பட்டமையின் விளைவாக 2021இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் அதிகரித்தன. இது 2020 திசெம்பருக்கும் 2021 இற்குமிடையில் 64.6 சதவீதத்தினால் அதிகரித்த மசகெண்ணெய்யின்[3] இறக்குமதி விலையில் பிரதிபலித்தது. இதன் விளைவாக, 2021இல் பெற்றோல் (92 ஒக்டேன்) ஊர்திகளுக்கான டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பனவற்றின் உள்நாட்டு விலைகள் இரண்டு தடவைகள் அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக பொது விலை மட்டத்தின் மீது மேலதிக மறைமுக விலை அழுத்தமொன்று ஏற்பட்டது. மேலும், உந்து ஊர்திகளின்

3 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் பி.எல்.சி


வரைபடம் 4.14
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த % மாற்றத்திற்கான பங்களிப்பு – 2021




(அ மின்சாரம், திரவ பெற்றோலிய வாயு, எரிபொருள், பஸ் கட்டணம் மற்றும் புகையிரத கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய உணவல்லா வகையின் நிருவகிக்கப்பட்ட பொருட்கள்
(ஆ) உணவல்லா வகையில் நிருவகிக்கப்பட்ட பொருட்கள் நீங்கலாக

*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.15
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த % மாற்றத்துக்கான பங்களிப்பு – 2021




(அ மின்சாரம், திரவ பெற்றோலிய வாயு, எரிபொருள், பஸ் கட்டணம் மற்றும் புகையிரத கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய உணவல்லா வகையின் நிருவகிக்கப்பட்ட பொருட்கள்
(ஆ) உணவல்லா வகையில் நிருவகிக்கப்பட்ட பொருட்கள் நீங்கலாக

*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி



உதிரிப்பாகங்களினது விலைகள், ஊர்திகளின் பழுதுபார்க்கும் செலவு மற்றும் வாடகை ஊர்திக் கட்டணங்கள் என்பன இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. மேலும், உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதி துணை வகையில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் 2021இல் பல தடவைகள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்திருக்கின்றன. இதற்கு, உலகளாவிய திரவப் பெற்றோலிய வாயு விலைகள் உயர்வடைந்தமையின் காரணமாக லிற்றோ காஸ் லிமிடெட் மற்றும் லாவ் காஸ் பிஎல்சி ஆகிய இரண்டும் 2021 ஒத்தோபர் 10ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 12.5 கி.கிறாம் திரவப்பெற்றோலிய வாயு உருளையொன்றின் விலையை கணிசமானளவிற்கு மேல்நோக்கித் திருத்தியமை பகுதியளவில் காரணமாக விளங்கியது. 2020 திசெம்பருக்கும் 2021 திசெம்பருக்கும் இற்குமிடையில் உலகளாவிய சந்தையில் திரவப்பெற்றோலிய வாயுவின்[4] அதாவது புறப்பேன் மற்றும் பியூட்டேன் என்பனவற்றின் விலைகள் முறையே 76.6 சதவீதத்தினாலும் 63 சதவீதத்தினாலும் அதிகரித்தமை கவனிக்கத்தக்கதொரு விடயமாகும். திரவப்பெற்றோலிய வாயு விலைகளின் திருத்தத்திற்குப் புறம்பாக, அதிகரித்த உணவு விலைகளும் தயாரிக்கப்பட்ட உணவின் உள்நாட்டு விலைகளின் மேல்நோக்கிய சீராக்கத்திற்கு முனைப்பான வகிபாகமொன்றினை ஆற்றின. இவ்வாண்டின் பெரும்பாலான பகுதியில் நிலையான மட்டமொன்றில் காணப்பட்ட கல்வி துணைத் துறை 2021 செத்தெம்பரிலிருந்து அதிகரித்தமைக்கு இரண்டாந்தர கல்விக்கான பன்னாட்டு பாடசாலைக் கட்டணங்களிலும் தனியார் வகுப்புக் கட்டணங்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். தனியார் மருத்துவ பயிற்சிகளை மேற்கொள்வதற்கான விலைகள் தனியார் வைத்தியசாலை கட்டணங்கள்/ மருத்துவ ஆய்வுகூடக் கட்டணங்கள் மற்றும் மருந்து/ மருந்தாக்கல் உற்பத்திகள் என்பனவற்றுக்கான கொடுப்பனவுகள் எடுத்துக்காட்டிய இடைப்பட்ட திருத்தங்கள் ஏப்பிறலிலிருந்து சுகாதார துணைத் துறையில் தொடர்ச்சியான அதிகரிப்புக்கள் ஏற்பட வழிவகுத்தன. எனினும், 2021 ஒத்தோபரில் வீட்டு வாடகைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பு நோய்த்தொற்றிற்கு முன்னர் அவதானிக்கப்பட்ட போக்குகளுடன் ஒப்பிடுகையில் சிறிதளவாகக் காணப்பட்ட வேளையில் வீட்டுத் துறையின் பேணல் மற்றும் கருவிகளின் செலவு 2021 செத்தெம்பரிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்கிறது. அதேவேளை, 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பெரும்பாலும் நிலையான மட்டங்களில் காணப்பட்ட ஆடை மற்றும் காலணிகளின் விலை 2021இல் தொடர்ச்சியாக அதிகரித்ததுடன் ஒத்தோபரின் பின்னர் உயர்ந்த வீதத்தில் அதிகரித்தது.

4 சவுதி அராம்கொ திரவ பெற்றோலிய வாயு விலைகள்

## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2021 சனவரியில் 138.7 சுட்டெண் புள்ளிகளிலிருந்து திசெம்பரில் 154.7 சுட்டெண் புள்ளிகளிற்கு விரைவாக அதிகரித்தது.** 2021 சனவரியிலும் பெப்புருவரியிலும் அவதானிக்கப்பட்ட மாதாந்த அதிகரிப்புக்களுக்கு உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகள் அசைவுற்றமையே உதவியாக அமைந்தது. எனினும், மாச்சு மற்றும் ஏப்பிறல் மாத காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட மாதாந்த வீழ்ச்சிகள் உணவு வகைகளின் விலை அசைவுகளின் மூலமே முழுமையாகத் தூண்டப்பட்டன. அதன் பின்னர், உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலை அசைவுகள் மே மற்றும் யூன் மாதங்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுக்கு பங்களித்ததுடன் உயர்ந்த பங்களிப்பு உணவு வகைகளிலிருந்து பெறப்பட்டது. யூலையில் அவதானிக்கப்பட்ட கொழும்பு

நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உணவல்லா வகையில் காணப்பட்ட பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அசைவுகளே முக்கியமாகப் பங்களித்ததெனினும், ஓகத்து மற்றும் செத்தெம்பர் இரண்டு மாதங்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளினால் தூண்டப்பட்டன. இதேபோன்று உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகள் 2021 ஒத்தோபரிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க மாதாந்த அதிகரிப்பிற்கு பங்களித்ததுடன் இதில் கணிசமான பங்கு உணவு வகைகளிலிருந்து உருவாக்கப்பட்டதாகும்.

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

**சனவரியில் 142.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதாந்த வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்த மாச்சு தவிர, தொடர்ச்சியாக அதிகரித்து, 2021 திசெம்பரில் 161.0 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது.** உணவு வகையின் விலைகளில் ஏற்பட்ட அசைவுகள் முக்கியமாக 2021 சனவரி மற்றும் பெப்புருவரி மாதங்களில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன. 2021 மாச்சில் அதிகரித்துச்செல்லும் போக்கு மாற்றமடைந்தமைக்கு உணவு வகையில் காணப்பட்ட பொருட்களின் விலை வீழ்ச்சிகளே ஒரே காரணமாகும். எனினும், கொவிட்-19 நோய்த்தொற்றின் மூன்றாவது அலை தோற்றம்பெற்ற வேளையான ஏப்பிறலிலிருந்து உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலும் காணப்பட்ட பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக 2021 திசெம்பர் வரை தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரித்ததெனினும், உணவல்லா வகையில் முக்கிய செல்வாக்கினைக் கொண்டிருந்த செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மாதங்கள் நீங்கலாக, கணிசமான பங்களிப்புக்கள் உணவு வகைகளிலிருந்து கிடைத்தது. உணவுப்பொருட்களின் நிரம்பல் பற்றாக்குறை அவற்றின் விலைகளை உயர்த்தி அதேவேளை குறிப்பிட்ட துறைக்குடித்தொகையின் பண வருமான அதிகரிப்பும் இவ்விலைகளின் அதிகரிப்புக்கு பங்களித்தன.

## உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படுகின்ற வேளாண்மை, தயாரிப்பு மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகள் துறைகளிலுள்ள பொருட்கள் மற்றும் பணிகளின் உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் பெறப்பட்ட சராசரி விலைகளினால் அளவிடப்பட்டவாறான உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் 2021 நவெம்பரில், 2013இன் நான்காம் காலாண்டிலிருந்து 2018இன் நான்காம் காலாண்டிற்கு மீள் தளப்படுத்தப்பட்டது.** இதற்கமைய, உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணின் மீள்தளப்படுத்தப்பட்ட நிறைகள் மற்றும் விலைகளுடன் தொடர்பான காலம் தற்போதைய பொருளாதாரப் போக்குகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் இற்றைப்படுத்தப்பட்டன. மேலும், தயாரிப்பு துணைத் துறையின் புவியியல்சார் பிரதேசங்களின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்துவதற்கு மேலதிகமாக, பல புதிய பொருட்கள் சேர்க்கப்பட்டதுடன் ஏற்கனவேயுள்ள சில பொருட்கள் வேளாண்மை மற்றும் தயாரிப்பு துணைத் துறைகளிலிருந்து நீக்கப்பட்டன. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (2018 4ம் காலாண்டு = 100) சனவரியின் 116.0 சுட்டெண் புள்ளியிலிருந்து 2021 திசெம்பரில் 133.7 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்து 2021 காலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. வேளாண்மைத் துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் சனவரியில் 134.0 சுட்டெண் புள்ளிகளைப் புதிவுசெய்து ஒப்பீட்டு ரீதியில் உறுதியான மட்டமொன்றில் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதி ஐந்து மாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்து 2021 திசெம்பரில் 161.7 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது. அதேவேளை, தயாரிப்பு துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் 2021 சனவரியிலும் திசெம்பரிலும் முறையே 113.9 சுட்டெண் புள்ளிகளையும் 131.4 சுட்டெண் புள்ளிகளையும் பதிவுசெய்து இவ்வாண்டுப்பகுதியில் பெரும்பாலும் மாதாந்த அதிகரிப்புக்களை பதிவுசெய்தன. சனவரியில் 100.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த பொதுப் பயன்பாட்டு வசதி துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (மின்வலு, வாயு, நீராவி மற்றும் வளிச்சீராக்கி வழங்கல் மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் விநியோகம்) முதல் நான்கு மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு தளம்பல்களைப் பதிவுசெய்ததுடன் அதன்பின்னர் ஆண்டு முழுவதிலும் உறுதியடைந்து 2021 திசெம்பரில் 102.5 சுட்டெண் புள்ளியை அடைந்தது.

## 4.3 கூலிகள்

**முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறைகளிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் அதிகரிப்பொன்றினைக் காட்டிய வேளையில் அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் தேய்வொன்றினைக் காட்டின.** பெயரளவு கூலிகளும் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் நியதிகளில் அதிகரிப்பொன்றினைக் காட்டிய வேளையில் அரச துறையிலுள்ள ஊழியர்களுக்கான நியதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் மாற்றமின்றிக் காணப்பட்டன. பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட சுருக்கம் போன்ற கொவிட்-19 நோய்த்தொற்றின் விளைவுகள் 2021இல் கூலிகளின் வளர்ச்சியின் மீது எதிர்க்கணியமான தாக்கமொன்றினை ஏற்படுத்தின. மறுபுறத்தில், கொவிட்-19 நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை

4

வரைபடம் 4.16
2021இல் முறைசாரா தனியார் துறை கூலி விலைச் சுட்டெண்ணின் அசைவு (பெயரளவு)




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் குறைந்தபட்சக் கூலிகளை அதிகரிப்பதற்கான தீர்மானம் என்பன குறிப்பாக, முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறைக் கூலிகளின் மீது நேர்க்கணியமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தன.

## தனியார் துறை கூலிகள்

4

**முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் (2012=100) 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினைத் தொடர்ந்தன.** பெயரளவு கூலி வீதச் சுட்டெண் 2021 ஏப்பிறலில் காணப்பட்ட சிறிதளவு வீழ்ச்சி நீங்கலாக, 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மிதமான அதிகரிப்பொன்றினை பதிவுசெய்ததுடன் 2021 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் ஆகிய இரண்டு மாதங்களிலும் கடுமையான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. ஏப்பிறலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு சிறு கைத்தொழில் நடவடிக்கைகளின் கூலிகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சி காரணமாக இருந்தவிடத்து, 2021 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபரில் கடுமையான அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டமைக்கு அனைத்து துணை நடவடிக்கைகளும் அதாவது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளினால் தூண்டப்பட்டமையே காரணமாகும். இவ்வபிவிருத்திகளின் காரணமாக முறைசாரா தனியார் துறையின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் வேளாண்மையின் பெயரளவுக் கூலிகள் 6.4 சதவீதத்தினாலும் கைத்தொழில் துறையின் பெயரளவுக் கூலிகள் 9.7 சதவீதத்தினாலும் பணிகள் துறையின் பெயரளவுக் கூலிகள் 10.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன கொவிட்-19 உடன் தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை மற்றும் நாடளாவிய நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன முறைசாரா துறையின் கூலிகள் அதிகரிப்பதற்கு வழியமைத்தன. மேலும், தொழில்நிலை எண்ணிக்கையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு கைத்தொழில்கள் இடையேயான தொழிலாளர் பெயர்வுகளின் காரணமாக தொழிலாளர் கேள்விகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் தொடர்பான கூலிகளின் அதிகரிப்பிற்கு ஓரளவு காரணமாக அமைந்தன. மேலும், வாழ்க்கைச் செலவின் உயர்வும் முறைசாராத் தனியார் துறைக் கூலிகள் குறிப்பாக, ஆண்டின் பிற்பகுதியில் அதிகரிப்பதற்கு பங்களித்தன. அதேவேளை, முறைசாரா தனியார் துறையின் உண்மை கூலி வீதச் சுட்டெண் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 2.0 சதவீதத்தினால் அதிகரித்தன.

**கூலி நிர்ணய சபையினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணினால் (1978 திசெம்பர் =100) அளவிடப்பட்டவாறான முறைசார் தனியார் துறையிலுள்ள[5] ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 74.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.** இக்கணிசமான அதிகரிப்பிற்கு, தேயிலை மற்றும் இறப்பர் பயிரிடல் மற்றும் தயாரிப்பு வர்த்தகத்திற்கான கூலி தொடர்பான கூலி நிர்ணய சபைகள் ஊடாக 2021 மாச்சு 05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த கூலி ரூ.1,000 இற்கு அதிகரித்தமை காரணமாக அமைந்தது. மேலும், 2021 ஓகத்து 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2016ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தொழிலாளர் தேசிய குறைந்தபட்ச கூலிகள் சட்டத்திற்கு செய்யப்பட்ட திருத்தங்களின் காரணமாக தனியார் துறையின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் ரூ.10,000 இலிருந்து ரூ.12,500 இற்கு அதிகரித்தமை மற்றும் குறைந்தபட்ச நாளாந்தக் கூலி ரூ.400 இலிருந்து ரூ.500 இற்கு அதிகரிக்கப்பட்டமையும் இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தன. இதற்கமைய, முறைசார் தனியார் துறையின் உண்மை கூலி வீதச் சுட்டெண்ணும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் 64.3 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக வீடுகளில் தங்கியிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட ஊழியர்கள் தொடர்பான நிலைமைகளைப் பொறுத்தவரையில், இறுதியாகச் செலுத்தப்பட்ட அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் அல்லது மாதம் ஒன்றிற்கு ரூ.14,500 இதில் எது ஊழியர்களுக்குச் சாதகமானதோ அதனை ஊழியருக்குச் செலுத்துவது தொடர்பான முத்தரப்பு உடன்படிக்கை சுற்றுலாத் தொழில் துறைக்காக 2021 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டது.

## அரச துறை கூலிகள்

**அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் (2016 = 100) அளவிடப்பட்டவாறான, அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்**

5 கூலி நிர்ணய சபைகளினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட முறைசார் தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் (1978 திசெம்பர் = 100) தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றன.

**2021ஆம் ஆண்டுப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன.** மறுபுறத்தில், அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 6.4 சதவீதத்தினால் தேய்வடைந்தன. 2022 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதிபர்கள், ஆசிரியர்களின் கூலிகளில் காணப்பட்ட கூலி முரண்பாட்டைத் தீர்க்கும் நோக்கில் இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை என்பனவற்றின் கூலிகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தம் மற்றும் நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட ரூ.5,000 கொண்ட சிறப்புப் படி என்பன அரச துறை ஊழியர்களின் கூலிகள் மீதான நியதிகளில் நேர்க்கணியத்தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும்.

4